உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை)

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2016–2017

**மானியக் கோரிக்கை எண். 13**

இரா. காமராஜ்
உணவு மற்றும் நுகர்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | 1 – 2 |
| 1 | பொது விநியோகத் திட்டம் | 3 – 21 |
| 2 | விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 22 – 24 |
| 3 | நுகர்வோர் பாதுகாப்பு | 25 – 31 |
| 4 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 33 – 48 |
| 5 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 49 – 57 |
| 6 | அமலாக்கம் | 58 – 64 |
| | முடிவுரை | 65 |

# முகவுரை

அனைவருக்கும் உணவு பாதுகாப்பு வழங்குவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கை அடைய அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதால், உணவு பாதுகாப்பை வழங்கும் சிறந்த திட்டமாக அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

2. மத்திய அரசு நாடு முழுவதும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை நடைமுறைபடுத்தியுள்ளது. மத்திய அரசு இயற்றியுள்ள தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ன்படி, மாநிலத்தின் மக்கள் தொகையில் 50.55 சதவிகிதத்தினர் மட்டும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்பெற இயலும். எனவே, மாநில அரசானது, இச்சட்டத்தினை அமல்படுத்த தனது கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

3. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினை கட்டுப்படுத்துவதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே, சந்தை தலையீடு நடவடிக்கைகளுக்காக ரூ.100 கோடி நிதியுடன் கூடிய விலை கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சில அத்தியாவசியப் பொருட்களின்

விலையில் இயல்புக்கு அதிகமாக ஏற்ற இறக்கம் இருக்கும்போது இந்நிதியத்திலிருந்து தேவையான தொகையை விடுவித்து, அத்தியாவசியப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகின்றன. சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கான மானியம் முழுவதும், மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

# இயல்–1

## பொது விநியோகத் திட்டம்

### 1.1 முன்னுரை

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். பொது விநியோகத் திட்டம் வருமான அடிப்படையில் இல்லாமல் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களுக்கும் குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். குடும்பங்களை வருமான அடிப்படையில் வறுமைக் கோட்டிற்கு மேல்/வறுமைக் கோட்டிற்கு கீழ் என பிரிப்பது ஏழை மக்களின் உணவு பாதுகாப்பை பாதிப்பதாக அமையும். தமிழ்நாட்டில் பருவ மழை பொய்த்தல், அடிக்கடி ஏற்படக்கூடிய வறட்சி மற்றும் வெள்ளம் அதிக எண்ணிக்கையிலான ஏழை எளிய மக்களை பாதிப்பிற்கு உள்ளாக்கும். உலக அளவில் சமீபத்தில் ஏற்பட்ட பொருளாதார தேக்க நிலை மக்களின் பொருளாதார நிலையை மிகவும் பாதித்துள்ளது. எனவே குறிப்பிட்ட எண்ணிக்கையில் குடும்பங்களை இலக்கு நிர்ணயிக்கப்பட்டவை என எடுத்துக்

கொண்டு, எஞ்சிய பெரும்பாலான குடும்பங்களை வருமான அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்திலிருந்து விலக்குவது ஏற்றுக்கொள்ள முடியாததோடு, ஏழை எளிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் உணவு பாதுகாப்பையும் பாதிக்கும் செயலாகும். எனவே, மைய அரசு பரிந்துரைக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தாமல் பாகுபாடற்ற அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையானது, பொது விநியோகத் திட்டத்தினை முறைப்படுத்தும் அரசின் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதுடன், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துகிறது. 90 விழுக்காட்டிற்கும் அதிகமான நியாய விலைக் கடைகள் கூட்டுறவு சங்க பதிவாளரின் கீழும், எஞ்சியவைகளில் பெரும்பாலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. இந்த இரண்டு நிறுவனங்கள் தவிர, மகளிர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்களாலும் நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு அரசின் சார்பு நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய உணவுக்

கழகத்திலிருந்து அத்தியாவசியப் பொருட்களான அரிசி மற்றும் கோதுமை போன்றவற்றை எடுத்து, மாநிலம் முழுவதும், அதன் கட்டுப்பாட்டில் உள்ள **292** கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. இதே போன்று சர்க்கரையை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து கொள்முதல் செய்து, கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு தேவையான, இதர அத்தியாவசியப் பொருட்களை வெளிச்சந்தையில், ஒப்பந்தபுள்ளி மூலமாக கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்கிறது.

அத்தியாவசியப் பொருட்கள் கிடங்குகளிலிருந்து இயக்கம் செய்யப்படும்போது வழியில் கடத்தப்படுவதைத் தடுக்க முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்கள் அடங்கிய அட்டவணைப்படி அத்திவாசியப் பொருட்கள் வாகனங்களில் இயக்கம் செய்யப்படுகின்றன. நியாய விலைக் கடைகளில் போதுமான அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உணவுப் பொருள் வழங்கல் துறை, வருவாய் துறை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும்

நியாய விலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கான தேவையைக் கணக்கிட்டு, நியாய விலைக் கடைகளில் மாத முடிவில் உள்ள அத்தியாவசியப் பொருள்களின் இறுதி இருப்பையும் கணக்கில் கொண்டு நியாய விலைக் கடைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் இணையதளம் வழியாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. நியாய விலைக் கடைகளை நடத்தும் முகமை, நியாய விலைக் கடைகளின் விற்பனை அளவு, இருப்புக் கொள்ளளவு, இட வசதி ஆகியவற்றைப் பொறுத்து தேவைப் பட்டியலை கொடுத்து அத்தியாவசியப் பொருள்களை பெற்று கடைகளை நடத்தி வருகின்றன. இதன் மூலம் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்படுவது உறுதி செய்யப்படுவதுடன் இருப்பு விபரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 1.2 ஏழை–எளியோர் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **01.06.2011** முதல் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்பட்டு

வருகிறது. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக ஆணை வெளியிடப்பட்டு தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய அளவில் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

நாட்டில் வேறு எங்கும் இல்லாத அளவிற்கு ஏழை எளிய மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் உன்னதமான இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 1.3 நியாய விலைக் கடைகள்

பெரும்பாலான நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், குறைந்த எண்ணிக்கையிலான நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. இம்மாநிலத்தில் தனியார் எவரும் நியாய விலைக் கடையை நடத்த அனுமதிக்கப்படுவதில்லை என்பதே இம்மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். **30.06.2016** அன்றைய தேதியில், கீழ்கண்ட அட்டவணைப்படி **34,686** நியாய விலைக் கடைகள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் **25,532** நியாய விலைக் கடைகள் முழு நேரக் கடைகள் ஆகும். **9,154** நியாய விலைக் கடைகள் பகுதி நேரக் கடைகள் ஆகும்.

| வரிசை எண் | நிறுவனம் | முழு நேர நியாய விலைக் கடை | பகுதி நேர நியாய விலைக் கடை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,301 | 149 | 1,450 |
| 2 | கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்குபவை) | 23,624 | 8,922 | 32,546 |
| 3 | இதர கூட்டுறவுச் சங்கங்கள் | 136 | 36 | 172 |
| 4 | மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள் (சுய உதவிக் குழுக்கள் நடத்துபவை உட்பட) | 468 | 47 | 515 |
| 5 | கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நடமாடும் நியாய விலைக் கடைகள் | 3 | 0 | 3 |
| | மொத்தம் | 25,532 | 9,154 | 34,686 |

குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கும் விதமாக அவர்களது இருப்பிடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் புதிய நியாய விலைக் கடைகளை திறக்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. கிராமப்புற பகுதிகளில் முழுநேர நியாய விலைக் கடைகள் அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும், அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகளும், நகர்புற பகுதிகளில் முழுநேர நியாய விலைக் கடைகள் அமைக்க

குறைந்த பட்சம் 800 குடும்ப அட்டைகளும், அதிகபட்சம் 1,000 குடும்ப அட்டைகளும் இருக்கும் வகையில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இது தவிர, மலைப் பகுதிகள், மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் கூடிய பகுதிகளில் நியாய விலைக் கடைகள் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை தளர்த்தி குறைவான குடும்ப அட்டைகள் இருந்தாலும் புதிய நியாய விலைக் கடைகள் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது. தாய்க் கடையில் புதிய கடை திறக்கப்பட்ட பின்பு 500 குடும்ப அட்டைகள் இருக்கும் வகையில் இருத்தல், திறக்கப்படும் பகுதி நேர கடையில் குறைந்த பட்சம் 150 குடும்ப அட்டைகள் இருப்பின், தாய் கடைக்கும் புதிய பகுதி நேர கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருப்பின் மாவட்ட ஆட்சித் தலைவர்களே புதிய பகுதி நேர கடையை திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 1.4 குடும்ப அட்டைகள்

### 1.4.1 குடும்ப அட்டைதாரர்கள் விருப்பம்

தமிழகத்தில் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. 30.06.2016 அன்றைய

தேதியில் இம்மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் விபரம் வருமாறு:

| வ. எண் | குடும்ப அட்டையின் வகை | தகுதியான அத்தியாவசியப் பொருட்களின் விபரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பச்சை நிற அட்டைகள் (அரிசி விருப்ப அட்டைகள் ) | அனைத்துப் பொருள்களும் | 1,91,53,352 |
| 2 | வெள்ளை நிற அட்டைகள் (சர்க்கரை விருப்ப அட்டைகள் ) | அரிசி தவிர அனைத்துப் பொருள்களும் | 10,79,387 |
| 3 | காக்கி நிற அட்டைகள் (காவலர் அட்டைகள் ) | அனைத்துப் பொருள்களும் | 66,478 |
| 4 | வெள்ளை நிற அட்டைகள் (எப்பொருளும் வேண்டாத அட்டைகள் ) | எந்தப் பொருளும் இல்லை | 65,169 |
| மொத்தம் | | | **2,03,64,386** |

### 1.4.2 அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள்

தமிழக அரசு குடும்ப அட்டைதாரர்களை வறுமை கோட்டிற்குகீழ் மற்றும் வறுமை கோட்டிற்கு மேல் என்று வகைப்படுத்தாவிட்டாலும், உச்ச நீதிமன்றத்தின் அறிவுரைப்படி வறியவர்களில் மிகவும் வறியவர்களை கண்டறிந்து அவர்களது குடும்ப அட்டைக்கு அந்தியோதயா அன்னயோசனா திட்ட முத்திரையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை **18,64,600.**

தெரிவு செய்யப்பட்ட அந்தியோதயா அன்னயோசனா திட்ட பயனாளிகளில், தகுதியில்லாத பயனாளிகளை கண்டறிய அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / உதவி ஆணையாளர்களால் உரிய தணிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், ஏழைகளிலும் ஏழைகளாக உள்ள அந்தியோதயா அன்னயோசனா திட்ட பயனாளிகளுக்கு 01.06.2011 முதல் 35 கிலோ விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

### 1.4.3 திருநங்கையர்களுக்கு குடும்ப அட்டைகள்

திருநங்கைகளை சமுதாயத்தின் ஓர் அங்கம் என அவர்களுக்கு அங்கீகாரம் அளித்து அவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில், திருநங்கையர்களுக்கு 30.06.2016 முடிய 2,135 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.4.4 புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

மாநிலம் முழுவதும் புதிய குடும்ப அட்டைக்கு பரிந்துரைக்கப்படும் விண்ணப்பங்களை சென்னை நகரில் எல்காட் நிறுவனத்திற்கு அனுப்பி, புதிய குடும்ப அட்டை அச்சடித்து பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை போக்கும்

வகையில், புதிய குடும்ப அட்டை அச்சடிக்கும் முறையை மேலும் துரிதப்படுத்த புதிய குடும்ப அட்டைகள் அச்சடிக்கும் அதிகாரம் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் **01.06.2011** முதல் **30.06.2016** முடிய **16,20,128** புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.4.5 போலி குடும்ப அட்டை களைதல்

அதிகபட்ச மானிய விலையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதை உறுதி செய்ய, போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து களையும் பணி மிகவும் முக்கியமானதாகும். நியாய விலைக் கடையில் பதியப்பட்டுள்ள குடும்ப அட்டைகளை வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்து தகுதியற்ற / போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து களையும் பணி செய்திட குடும்ப அட்டை வழங்கும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் **01.06.2011** முதல் **30.06.2016** முடிய **4,85,123** போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு, நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், போலி குடும்ப அட்டைகள் களையும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## 1.5 அத்தியாவசியப் பொருட்களின் விநியோக அளவு

அத்தியாவசிய பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் போன்றவை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படுகிறது. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கப்படுகின்றன. அவற்றின் விலை மற்றும் வழங்கல் அளவு விவரம் பின்வருமாறு:

| பொருட்கள் | விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு) | விநியோக அளவு |
|---|---|---|
| அரிசி | விலையில்லா அரிசி (மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 01.06.2011 முதல்) | மாதம் ஒன்றிற்கு பெரியோர்க்கு 4 கிலோ மற்றும் சிறியோர்க்கு 2 கிலோ வீதம் குறைந்த பட்சம் 12 கிலோ, அதிக பட்சம் 20 கிலோ, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 16 கிலோ அதிக பட்சம் 24 கிலோ. ஏஏஒய் குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ. |
| சர்க்கரை | ரூ. 13.50 | நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் குடும்ப அட்டைக்கு அதிக பட்ச அளவு 2 கிலோ. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 3 கிலோ. |
| கோதுமை | ரூ 7.50 | சென்னை நகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ. இதர பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 5 கிலோ. |

| | | |
|---|---|---|
| மண்ணெண்ணெய் | ரூ. 13.60 முதல் ரூ.14.20 வரை | எரிவாயு உருளை இணைப்பு மற்றும் பொது ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. |
| துவரம் பருப்பு* | ரூ. 30 | குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ. |
| உளுத்தம் பருப்பு | ரூ. 30 | குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ. |
| பாமாயில் | ரூ.25 | குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 1 லிட்டர். |

* தற்சமயம் துவரம் பருப்புக்கு மாற்றாக கனடா மஞ்சள் பருப்பு வழங்கப்படுகிறது.

## 1.6 அரிசி

தமிழ்நாட்டு மக்களின் பிரதான உணவாக அரிசி திகழ்கிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியை விநியோகம் செய்ய ஏதுவாக மத்திய தொகுப்பு ஒதுக்கீடு இந்திய உணவுக் கழகம் மூலமாக மாநிலத்தில் பெறப்படுகிறது. தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் இந்திய உணவுக் கழகம் நிர்ணயித்துள்ள அரிசியின் விற்பனை விலை விவரம் வருமாறு:

| வகை | மாத ஒதுக்கீடு (மெ. டன்னில்) | வழங்கும் விலை (கிலோ ஒன்றுக்கு) ரூ. |
|---|---|---|
| அந்தியோதயா அன்ன யோசனா | 65,262 | 3.00 |
| வறுமைக்கோட்டிற்கு கீழ் | 1,04,936 | 5.65 |
| வறுமைக்கோட்டிற்கு மேல் | 1,26,255 | 8.30 |

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் அந்தியோதயா அன்ன யோசனா உட்பட இதர நலத் திட்டங்களுக்கு மாதாந்திர அரிசி தேவை 3.96 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். தமிழக அரசு, மைய அரசின் அந்தியோதயா அன்ன யோசனா மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மாதாந்திர ஒதுக்கீடு முழுவதையும் பயன்படுத்துகிறது. பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மைய அரசின் சார்பாக கொள்முதல் செய்யும் நெல் முழுவதும் அரவை செய்யப்பட்டு மத்தியத் தொகுப்பிலிருந்து மைய அரசு வழங்கும் அரிசி ஒதுக்கீட்டில் சரி செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதாந்திர அரிசி நுகர்வு அந்தியோதயா அன்ன யோசனா குடும்ப அட்டைகள் உட்பட 3.23 இலட்சம் டன்களாகும்.

மைய அரசின் அரிசி ஒதுக்கீட்டிற்கும், மாதாந்திர பொது விநியோகத் திட்ட நுகர்விற்கும் இடையேயான குறைவு, மைய அரசினால் வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின்கீழ் பெறப்படும் ஒதுக்கீட்டிலிருந்து ஈடு செய்யப்படுகிறது.

## 1.7 சர்க்கரை

மாநிலத்தின் பொது விநியோகத் திட்ட சர்க்கரை தேவையில் மத்திய அரசு **10,835** மெட்ரிக் டன் சர்க்கரையை லெவி ஒதுக்கீடாக செய்து வந்தது. **01.07.2013** முதல் சர்க்கரை ஆலைகளுக்கான லெவி கட்டுப்பாடுகளை மத்திய அரசு நீக்கியதன் விளைவாக, மத்திய அரசின் லெவி சர்க்கரை ஒதுக்கீடு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும், நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட சர்க்கரையினை கிலோ ஒன்றுக்கு ரூ.**13.50** எனத் தொடர்ந்து விற்பனை செய்து வரும் மாநிலங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துவரும் **10,820** மெ.டன் பொது விநியோகத் திட்ட சர்க்கரை அளவிற்கு மட்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.**18.50** மானியமாக மைய அரசு வழங்கி வருகிறது. தமிழக அரசு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சர்க்கரை பெற்று வரும் குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி, மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்திற்கு தேவைப்படும் சர்க்கரை முழுவதையும் வெளிச்சந்தை விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து கொள்முதல் செய்கிறது. மத்திய அரசு லெவி சர்க்கரை ஒதுக்கீட்டினை முற்றிலுமாக நிறுத்திவிட்ட போதிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு சில்லறை விற்பனை விலையில் மாற்றம்

ஏதும் செய்யாமல், தமிழக அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 36,500 மெ.டன் சர்க்கரையை விநியோகம் செய்து வருகிறது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை அரசே ஏற்கிறது.

**1.8 கோதுமை**

மத்திய அரசு குறியீட்டு இலக்குடன் கூடிய நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றிற்கு தமிழ்நாட்டிற்கு 13,783 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்கிறது. மேலும் கூடுதல் ஒதுக்கீடாக மாதம் ஒன்றிற்கு 3,108 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**1.9 மண்ணெண்ணெய்**

இம்மாநிலத்தின் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 30.06.2016 தேதி நிலவரப்படி மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 59,000 கி.லி. ஆகும். இம்மாநிலத்திற்கு மார்ச் 2010 மாதம் வரை 59,780 கி.லி. மண்ணெண்ணெய் மாத ஒதுக்கீடாக வழங்கி வந்த மத்திய அரசு படிப்படியாக குறைத்து, ஜுலை 2016 மாதம் முதல் 25,704 கி.லி. மண்ணெண்ணெய் வழங்கி வருகிறது. இவ்வொதுக்கீடானது தற்போதைய வழங்கல் அளவின்படி மாதாந்திர தேவையான 59,000 கி.லி–க்கு 44% ஆகும். தமிழகத்திலுள்ள அனைத்து

குடும்ப அட்டைதாரர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற நோக்கில், மாநிலத்தின் முழு மண்ணெண்ணெய் தேவையினை ஒதுக்கீடு செய்ய மத்திய அரசினை மாநில அரசு கோரியுள்ளது. மத்திய அரசின் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மாநிலத்தின் தேவைக்கு போதுமானதாக இல்லாததால், 2004–ம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள அனைத்து புதிய குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதமொன்றிற்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

01.08.2011 முதல் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைகளுக்கு லிட்டருக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரையிலான சில்லறை விற்பனை விலையில் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் வழங்குதலை ஒழுங்குபடுத்த மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் 5,000 முதல் 15,000 குடும்ப அட்டைதாரர்கள் மண்ணெண்ணெய் பெற ஏதுவாக உள்ளது. மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுவதால் மாதம்

முழுவதற்கும் தேவையான இருப்பு மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சரியான அளவில் மண்ணெண்ணெய் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது. தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் **260** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் **37** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், ஆக மொத்தம் **297** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

### 1.10 சிறப்பு பொது விநியோகத் திட்டம்

சிறப்பு பொது விநியோகத் திட்டம் மூலம் ஒவ்வொரு மாதமும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை விநியோகிக்கப்பட்டு வருகிறது. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் **13,461** மெ.டன் துவரம் பருப்பு, **7,000** மெ.டன் உளுத்தம் பருப்பு, **1** கோடியே **50** இலட்சம் லிட்டர் (பாக்கெட்டுக்கள்) பாமாயில் ஆகியவை மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 1.11 ரமலான் மாதத்தில் சிறுபான்மையினருக்கு அரிசி வழங்குதல்

**2016**, ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு **4,942** மெ.டன் அரிசி சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது.

**1.12 பொதுவிநியோகத் திட்டத்தினை கணினிமயமாக்கல் மற்றும் மின்னணு குடும்பஅட்டை (Smart Card ) வழங்குதல்**

முழு கணினிமயமாக்கல் திட்டப்பணிகளை தமிழகம் முழுவதும் மேற்கொள்வதற்காகவும், அதன் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டு காலத்திற்கு பராமரிக்கும் பணியும், திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மின்னணு குடும்ப அட்டை வழங்குவதற்கு ஏதுவாக ஆதார் எண் உள்ளடக்கிய கணினித்தொகுப்பு விவரம் பெறப்பட்டு வருகிறது.

அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணு விற்பனை கருவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆதார் விவரத்தொகுப்பினை இணைக்கலாம். மேற்குறிப்பிட்ட விவரங்கள் பெறப்பட்டபின், மின்னணு குடும்ப அட்டை வழங்கத் தேவையான செம்மைப்படுத்தப்பட்ட பொது விநியோகத் திட்ட பயனாளிகளின் விவரத் தொகுப்பு உருவாக்கப்படும். புதிய மின்னணு குடும்ப அட்டைகள் 2016–ம் ஆண்டு இறுதிக்குள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**1.13 உணவு மானியம்**

பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் அதிகபட்ச மானிய விலையில் வழங்கப்பட்டு வருவதோடு,

விலையில்லா அரிசியும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2015–2016 ஆம் நிதியாண்டிற்கு உணவு மானிய தொகையாக ரூ.5300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உணவு மானியத்தின் செலவு விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | அத்தியாவசியப் பொருட்கள் | மானியம் (கோடி ரூபாயில்) |
|---|---|---|
| 1. | அரிசி | 3458.50 |
| 2. | சர்க்கரை | 632.00 |
| 3. | மண்ணெண்ணெய் | 51.50 |
| 4. | **சிறப்பு பொதுவிநியோகத்திட்டப் பொருட்கள்**<br>அ) துவரம் பருப்பு/ கனடியன் துவரம் பருப்பு<br>ஆ) உளுத்தம் பருப்பு<br>இ) பாமாயில் | 1158.00 |
| **மொத்தம்** | | **5,300.00** |

2016–2017ம் நிதியாண்டிற்கு உணவு மானிய தொகையாக ரூ.5,500 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

## இயல்–2

## விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**2.1** அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் நுகர்வோரின், குறிப்பாக ஏழை, எளிய மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் உணவு மற்றும் ஆரோக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை மாறுதலுக்குரியது. சில பொருட்களின் தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையேயுள்ள இடைவெளி மற்றும் இதனால் பற்றாக்குறை ஏற்படுமோ என்று மக்கள் மனதில் ஏற்படும் அச்சம் ஆகியன விலை உயர்விற்கு காரணமாகின்றன. இந்த அரசு பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களை கூர்ந்து கண்காணித்து ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களை விலைவாசி உயர்விலிருந்து பாதுகாத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**2.2** அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த அரசால் அமைக்கப்பட்ட **மாநில அளவிலான விலை கண்காணிப்புக் குழு** தக்க பரிந்துரைகளை செய்கிறது. இக்குழு, பொருட்களின், முக்கியமாக அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் மற்றும் காய்கறிகளின் விலைகளை

கண்காணித்து, தேவையான சமயங்களில் கூடி விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**2.3** உயர்ந்து வரும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்திலிருந்து நுகர்வோரை பாதுகாக்க அரசு சந்தை தலையீட்டு நடவடிக்கையாக ரூ.100 கோடி நிதியை கொண்ட விலை கட்டுப்பாட்டு நிதியத்தினை அமைத்துள்ளது. குறிப்பிட்ட பொருட்களின் அதிகப்படியான விலையேற்றத்தினை தடுக்க, இந்நிதியினை பயன்படுத்தி அப்பொருட்கள் கொள்முதல் விலைக்கே கூட்டுறவு சில்லறை அங்காடிகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிறது.

**2.4** பின்வரும் முன்னெச்சரிக்கை மற்றும் சரிசெய்யும் நடவடிக்கைகளால் தமிழகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன.

- 1,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு, 1,000 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பு, 35 மெட்ரிக் டன் மிளகாய், 50 மெட்ரிக் டன் புளி மற்றும் 24,000 லிட்டர் நல்லெண்ணெய் விலை கட்டுப்பாட்டு நிதியினை பயன்படுத்தி கூட்டுறவு சங்க பதிவாளரால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- பருப்பு விலையை கட்டுப்படுத்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 680 மெ.டன் துவரை (Unmilled) உலோகம் மற்றும் கனிம வர்த்தக கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு அடக்க விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

- விலைக் கட்டுப்பாட்டு நிதியிலிருந்து 100 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் துவக்க ரூ.20 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

# இயல் – 3

# நுகர்வோர் பாதுகாப்பு

## 3.1 முன்னுரை

பட்டினி ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அடுத்து அரசு நுகர்வோர் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. நுகர்வோர்களுக்கு உரிய விலையில் நல்ல தரத்துடன் பொருட்கள்/ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்யவேண்டும் என்பதை அடிப்படை நுகர்வோர் கொள்கையாக கொண்டுள்ளது. நுகர்வோர்கள் தாங்கள் செலுத்தும் விலைக்குரிய மதிப்பை பெற்றிடவும், ஏமாறாமல் இருக்கவும் தக்க விழிப்புணர்வு நடவடிக்கையினை அரசு எடுத்து வருகின்றது. வணிக நடைமுறைகளை முறைப்படுத்தி ஒழுங்குப்படுத்துவதன் மூலம் நுகர்வோர்கள் சுரண்டப்படுவதிலிருந்து விடுபட்டு தெளிவு பெற்ற நுகர்வோர்களாக திகழச் செய்யலாம். 1) நடைமுறை தீர்வு முறைகளின்படி நுகர்வோருக்கான உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். 2) குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு உறுதி செய்ய போதுமான அதிகாரம் பெற்ற திறம்பட செயல்படக் கூடிய தீர்வு அமைப்பு நிறுவுதல் ஆகிய இரண்டு தொடர் நடவடிக்கைகள் வாயிலாகச் செயல்படுத்தி வருகின்றது.

## 3.2 நுகர்வோர் குறைகளுக்கான சட்டப்படியான தீர்வுகள்

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

### 3.2.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

இவ்வாணையம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கும் மேல்முறையீட்டு ஆணையமாக புதுதில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு நுகர்வோர் நேரடியாக வழக்கு தொடரலாம். அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

### 3.2.2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடி வரை நிவாரணம் கோரும் நுகர்வோர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை தலைவராகவும், இரண்டு நீதிமுறைசார் உறுப்பினர்களும் மற்றும் இரண்டு நீதிமுறைசாரா உறுப்பினர்களும் அவற்றில் ஒரு பெண் உறுப்பினரையும் கொண்டதாகும். மாநில ஆணையம் மற்றும் முப்பது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் நிர்வாகத்தை கவனிக்க துறைத் தலைவராக பதிவாளர் உள்ளார். நபர் இந்த மாநில ஆணையம், தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரமும் மற்றும் மாவட்ட மன்றங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும். மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஜுன்–2016 வரை 27,445 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 24,497 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 89.25% ஆகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் 11.08.2012 அன்று மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சுற்றுக்கிளை

மதுரையில் திறந்து வைக்கப்பட்டு **13** தென் மாவட்ட நுகர்வோர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது.

### 3.2.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், **1986**ன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் இருக்கவேண்டும். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் முப்பது மாவட்டங்களில் செயல்படுகின்றன. இவற்றில் தனது எல்லைக்குட்பட்டு நுகர்வோர் ரூபாய் இருபது இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். Þற்¸லிஷீம்ஷட்ீ ஸ்கூஷிஷெூக்கூஷி^குக் இம்மாவட்டத்தின் தலைவர், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியாவார். இதில் ஒரு பெண் உட்பட இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். மாவட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஜூன், **2016** வரை **1,13,564** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில், **1,05,028** வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் **92.48**% ஆகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **24.2.2014** அன்று பிரேசர் பாலம், பூங்கா நகர், சென்னையில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம், சென்னை (தெற்கு) மற்றும் சென்னை (வடக்கு) அலுவலக கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டன. நாமக்கல்

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு கட்டடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திருப்பூர் மற்றும் அரியலூருக்கென்று தனியாக, புதியதாக மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் உருவாக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 3.2.4 சமரச மையம்

நுகர்வோர்களின் குறைகளை தீர்க்கும் மாற்று வழியாக சமரச மையம் தோற்றுவிக்கப்பட்டது. இத்தீர்வுமையத்தில் கட்டணம் ஏதுமின்றி பயிற்றுவிக்கப்பட்ட, நடுநிலையான மூன்றாம் நபர், பேச்சுவார்த்தை மூலம் வாதி, பிரதிவாதி இருவருக்கும் இடையே தீர்வு காணும் வகையில் மைய அரசின் வழிகாட்டுதலின்படி சமரச மையம் முன்னோடி திட்டமாக சென்னையில் துவக்கப்பட்டு, **15.12.2011** முதல் செயல்பட்டு வருகிறது.

தற்போது தமிழக அரசு இச்சமரச மையத்தினை ஏற்று நடத்திட முடிவு செய்து அதற்காக வருடத்திற்கு ரூ.3 இலட்சத்தினை வழங்கியுள்ளது.

## 3.3 தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகார சங்கம்

தமிழ்நாடு முழுவதுமான நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை ஒரு குடையின்கீழ் ஒருங்கிணைக்க, தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகார சங்கம்,

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளரை அலுவல்சார் தலைவராகவும், அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகளில் உள்ளவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது. இச்சங்கத்தால் மாநில நுகர்வோர் உதவி மையம் நடத்தப்பட்டு வருகின்றது. இது தவிர "**தமிழ்நாடு நுகர்வோர் கவசம்**" என்ற மாத இதழினை வெளியிடுதல், பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் ஆகியப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 3.4 மாநில நுகர்வோர் சேவை மையம்

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் கல்வி தொடர்பான செயல்பாடுகள் அனைத்தும், ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் "**தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ÜFè£ó சங்கம்**" என்ற அமைப்பின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில நுகர்வோர் உதவி மையம் நுகர்வோர் பிரச்சினைகளுக்கு மாற்று தீர்வு காணும் முறையில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் இம்மையத்தில் புகார் அளிக்கவும் நுகர்வோர் பிரச்சினை தொடர்பான ஆலோசனை பெறவும்

இயலும். இம்மையம், சேவையாளர் நுகர்வோர் பிரச்சினைகள் குறித்து விற்பனையாளரைத் தொடர்பு கொண்டு அப்பிரச்சினைகளைக் களைதல் மற்றும் பிரச்சினைகளுக்கு உரிய ஆலோசனை விளக்கங்கள் அளித்தல் உள்ளிட்ட பணிகளை ஆற்றுகிறது. இச்சேவை தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்கப்படுகிறது. மாநில நுகர்வோர் உதவி மையத்தினை கீழ்க்காணும் வகைகளில் நுகர்வோர் தொடர்பு கொள்ளலாம்.

| தொலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி | ஆன்லைன் பதிவு சேவை இணைய தள முகவரி |
|---|---|---|
| 044–28592828 | consumer@tn.gov.in<br>schtamilnadu@gmail.com | http://www.consumer.tn.gov.in |

| குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய செல்பேசி எண்கள் |
|---|
| 86 8001 8002, 86 8002 8003 |

### 3.4.1 தமிழ்நாடு நுகர்வோர் கவசம் – நுகர்வோர் விழிப்புணர்வு மாத வெளியீடு

நுகர்வோர்களுக்கான உரிமைகள், சட்டங்கள், தர நிர்ணயங்கள், மற்றும் விதிமுறைகள் தொடர்பான தகவல்கள் வழங்கும் வகையில் சிறப்புற வடிவமைக்கப்பட்ட மாத வெளியீடு ‘‘தமிழ்நாடு நுகர்வோர் கவசம்'' என்ற பெயரில் பிரதி மாதம் அச்சிட்டு அரசு அலுவலகங்கள், தன்னார்வ நுகர்வோர்

அமைப்புகள் மற்றும் அரசு பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்திய செய்தித்தாள் பதிவாளர் அமைப்பில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ள இந்த மாத வெளியீடு ரூ.10/– என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இம்மாத வெளியீடு 8,500 பிரதிகள் அச்சிடப்படுகிறது.

## 3.5 இணைய தளம் – www.consumer.tn.gov.in

நுகர்வோர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் விளக்க வரையறைகள் உள்ளிட்ட நுகர்வோர்களுக்கான முக்கிய தகவல்கள் அடங்கிய இணைய தளம் சென்னை, தேசிய தகவல் மையம் வாயிலாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இணைய தளத்தில் நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக தொடர்ந்து நடத்தப்படும் நிகழ்வுகள் குறித்த விவரங்கள் மற்றும் துறை வாயிலாக வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான வெளியீடுகள் இடம் பெற்றுள்ளன. இந்த இணைய தளத்தில் நுகர்வோர் உரிமை மீறல் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்த புகார்களை நேரடியாக பதிவு செய்யும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையானது மக்களுக்கு ஆற்றி வரும் அனைத்து சேவைகள் தொடர்பான முழுமையான விவரங்களையும் இந்த இணைய தளம் வாயிலாக அறிய இயலும்.

# இயல் –4

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

### 4.1 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1956–ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். தற்பொழுது, இந்நிறுவனம் கம்பெனிகள் சட்டம், 1956 பிரிவு 25–ன்படி, 01.04.2010 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம், பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம் மற்றும் சத்துணவு திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குழுமம் அதன் தலைவர் உள்ளிட்ட 11 இயக்குநர்களைக் கொண்டுள்ளது. உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குழுமத்தின் தலைவர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அன்றாட நிர்வாகப் பணிகளை மேலாண்மை இயக்குநர் கவனித்து வருகிறார்.

இக்கழகம், சென்னை தவிர, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மண்டலம் வீதம் 33 மண்டலங்களாகச் செயல்பட்டு வருகிறது. சென்னை மாவட்டம் மட்டும் பொதுமக்களின் தேவைக்கேற்ப சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) என இரு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இக்கழகத்தில் 8,183 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இது தவிர, 6,631 சுமைதூக்கும் தொழிலாளர்கள் கழக கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிகின்றனர்.

### 4.2 உள்கட்டமைப்பு

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கும் பணியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செய்து வருகிறது. சேமித்தல் மற்றும் விநியோக செயல்பாட்டிற்காக பின்வரும் உள்கட்டமைப்பு வசதிகளை இக்கழகம் கொண்டுள்ளது.

அ) 12.73 இலட்சம் மெட்ரிக் டன் மொத்தக் கொள்ளளவு கொண்ட 292 கிடங்குகள்

ஆ) 1,450 நியாய விலைக் கடைகள்

இ) 21 நவீன அரிசி அரவை ஆலைகள்

ஈ) 25 மாவட்டங்களில் 54 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

உ) 23 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

ஊ) 3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

எ) 5 சமையல் எரிவாயு விநியோக முகமைகள்

ஏ) 37 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

ஐ) தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் (நடப்பு பருவத்தில் 1,808)

## 4.3 கட்டுமானப் பணிகள்

### 4.3.1 சேமிப்பு கிடங்கு கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 12.73 இலட்சம் மெ.டன் மொத்தக் கொள்ளளவு கொண்ட 292 கிடங்குகளை பயன்படுத்தி வருகிறது. இதில் 9.82 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 221 கிடங்குகள் கழகத்தின் சொந்தக் கிடங்குகளாகும். மீதமுள்ள கிடங்குகள் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் தனியாரிடமிருந்தும் வாடகை அடிப்படையில் பெற்று பயன்படுத்தப்படுகின்றன. பொது விநியோகத் திட்டத்திற்கான சேமிப்பு கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை அளிக்கிறது. 165 இடங்களில் 6.88 இலட்சம்

மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை ரூ.739.01 கோடி மதிப்பீட்டில் நபார்டு (NABARD) வங்கி நிதியுதவியுடன் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் இந்நாள் வரை 2.49 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 106 கிடங்குகள் ரூ.164.22 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### 4.3.2 நெல் சேமிப்பு கலன் (Silo) அமைத்தல்

ரூ.58.48 கோடி மதிப்பீட்டில் 50,000 மெ.டன் கொள்ளளவுடைய நெல் சேமிப்பு கலன் (Silo), நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூரில் நிறுவப்பட உள்ளது. இதற்கு நபார்டு வங்கியின் தொழில் நுட்ப சேவை (NABCONS) பெறப்படுகிறது.

### 4.3.3 நியாய விலைக் கடை கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 26 மண்டலங்களில் 1,450 நியாய விலைக் கடைகளுடன் செயல்பட்டு வருகிறது. பொருட்களின் தினசரி இருப்பு விபரம் குறுஞ் செய்திகள் மூலமாகப் பெறப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. மேலும், நியாய விலைக் கடைகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 2014–15ம் ஆண்டில் 9 நியாய விலைக் கடைகள் கட்ட

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 6 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### 4.3.4 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள்

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. பொதுவாக ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் சுமார் 33 சென்ட் பரப்பளவில் 100 மெ.டன் கொள்ளளவுள்ள சேமிப்பு வசதி, உலர்களம், நெல் தூற்றும் இயந்திரம், மின்னனு தராசு, ஈரப்பதமானி ஆகிய வசதிகளை கொண்டிருக்கும். ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் முழுவதும், குறிப்பாக காவிரிப் பாசனப்பகுதி மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. 2015–16ஆம் ஆண்டு காரீப் கொள்முதல் பருவத்தில் 1,808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

நெல் கொள்முதலில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதால், இவற்றிற்கு நிரந்தர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டித்தரும் நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 311 நேரடி நெல்

கொள்முதல் நிலையங்கள், சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 260 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 85 இடங்களில் ரூ.22.70 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

### 4.3.5 நவீன அரிசி ஆலைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 21 நவீன அரிசி ஆலைகளைக் கொண்டுள்ளது. இவற்றின் மாதாந்திர அரவைத்திறன் 47,000 மெட்ரிக் டன் ஆகும். 15 ஆலைகளில் புழுங்கல் அரிசியும், இதர 6 ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. இவ்வாலைகளின் அரவைத் திறனை மேம்படுத்தவும், அரிசியின் தரத்தை உயர்த்தவும், இவற்றை படிப்படியாக நவீனப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டன. இரண்டாம் கட்டமாக, 2014–15ஆம் ஆண்டில் 7 நவீன அரிசி ஆலைகளை நவீனப்படுத்தும் பணிகள் 32.60 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. 2015–16ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டமாக, மீதமுள்ள 7 நவீன அரிசி ஆலைகளை ரூ.36 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.4 செயல்பாடுகள்

### 4.4.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

அமுதம் பல்பொருள் அங்காடிகளில் பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள், அன்றாடத் தேவைக்கான நுகர்பொருட்கள் ஆகியவை நியாயமான விலையில் விற்கப்படுகின்றன. இதனால் வெளிச்சந்தையில் பொருட்களின் விலை ஏற்றம் திறம்பட கட்டுப்படுத்தப்படுகிறது. சென்னை மாவட்டத்தில் 20 பல்பொருள் அங்காடிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் 3 பல்பொருள் அங்காடிகளுடன் மொத்தம் 23 அமுதம் பல்பொருள் அங்காடிகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகிறது.

அமுதம் பல்பொருள் அங்காடிகளின் விற்பனை விபரம் வருமாறு:

| வ. எண். | ஆண்டு | விற்பனை அளவு (கோடி ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2011–2012 | 35.48 |
| 2 | 2012–2013 | 36.23 |
| 3 | 2013–2014 | 51.59 |
| 4 | 2014–2015 | 58.12 |
| 5 | 2015–2016 | 45.34 |

### 4.4.2 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **11.01.2016** அன்று **25** மாவட்டங்களில் **54** அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் மாநிலம் முழுவதும் கூடுதலாக அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளை திறந்து அவற்றின் செயல்பாடுகளை விரிவாக்குவதில் அரசு உறுதி கொண்டுள்ளது.

### 4.4.3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

### 4.4.4 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்படுகிறது.

### 4.4.5 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

**14** மண்டலங்களில் **37** மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

இயக்கி வருகிறது. இவற்றுள் 29 சில்லரை விற்பனை நிலையங்களாகவும், 7 சில்லரை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களாகவும், ஒன்று மொத்த விற்பனை நிலையமாகவும் செயல்படுகின்றன.

### 4.4.6 பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி இயக்கம்

மாநிலத்தின் மாதாந்திரத் தேவையான 3.23 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியினை சில்லரை இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நகர்வு செய்கிறது.

### 4.4.7 நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை இயக்கம் செய்தல்

பொதுவாக நியாய விலைக் கடைகளுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டில், 60 சதவீதப் பொருட்கள் முந்தைய மாதம் 25–ம் தேதியிலிருந்து நடப்பு மாதம் 5–ம் தேதிக்குள் முன்நகர்வு செய்யப்படுகின்றன. மீதம் உள்ள 40 சதவீத பொருட்கள் நடப்பு மாதம் 20–ஆம் தேதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றன. அவ்வாறு பொருட்கள் நகர்வு செய்வதில் விடுதல் இருப்பின், உரிய அலுவலரின் சிறப்பு அனுமதி பெற்று அப்பொருட்கள் மாத இறுதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றன.

**4.4.8 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்**

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசியும், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படுகிறது. **30.06.2016** வரையில் **24,286** மெ.டன் அரிசியும், **3,435** மெ.டன் கோதுமையும் அம்மா உணவகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**4.4.9 ரூ.20/–க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சந்தை தலையீட்டு நடவடிக்கையாக, **17.04.2013–ல்** **1** கிலோ அரிசி ரூ.**20/–**க்கு விற்பனை செய்யும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில், தரம் மேம்படுத்தப்பட்ட ஒற்றை அவியல் புழுங்கல் அரிசி (Single Boiled cum Sortexed) அமுதம் பல்பொருள் அங்காடிகள், கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் சிறப்பு அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. **30.06.2016** வரை **9,661** மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**4.4.10 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள் திட்டம் **20.06.2013** அன்று பொது

மக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகளை விற்பனை செய்வதற்காக துவங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னையில் **16** பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகளை நடத்தி வருகிறது. **30.06.2016** வரையில் **828.537** மெ.டன் காய்கறிகள் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 4.4.11 அம்மா உப்பு விற்பனை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அம்மா உப்பு விற்பனை திட்டத்தினை **11.06.2014** அன்று துவக்கி வைத்தார்கள். மக்களின் அயோடின் குறைபாடுகளை களையும் வண்ணம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு, மற்றும் குறைந்த அளவு சோடியம் உப்பு ஆகிய மூன்று விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் நியாய விலைக் கடைகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

### 4.4.12 நெல் கொள்முதல்

**2002–03**ஆம் ஆண்டு காரீப் கொள்முதல் பருவத்திலிருந்து, பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ்,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு அனுமதித்து செயல்பட்டு வருகிறது. மேலும், நெல் கொள்முதலில், காவிரி பாசன மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) ஆகியவையும் நெல் கொள்முதல் செய்ய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. காரீப் **2015–16** கொள்முதல் பருவத்தில், மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை விவரங்கள் பின்வருமாறு:

| ரகம் | மத்திய அரசு வழங்கும் குறைந்தபட்ச ஆதாரவிலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | மொத்த விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|---|
| சன்ன ரகம் (Grade A) | 1,450 | 70 | 1,520 |
| சாதாரண ரகம் (Common) | 1,410 | 50 | 1,460 |

### 4.4.13 கண்டுமுதல் அரிசி

விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக் கழக நவீன அரிசி ஆலைகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள **422** தனியார் அரவை முகவர்களின் ஆலைகளிலும் அரிசியாக்கப்படுகிறது. மாநிலத்தின் மாதாந்திர பொது விநியோகத் திட்டத் தேவையில், அரவையின் மூலம் பெறப்படும் அரிசி போக, மிகுதியாகத் தேவைப்படும் அரிசியில் மாநிலத்திற்குரிய அளவினை இந்திய உணவு கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயக்கம் செய்யப்படுகிறது. நெல் கொள்முதல் செய்வதிலிருந்து அரிசியாக மாற்றப்படுவது வரை ஆகும் செலவினத் தொகையை மத்திய அரசு நிர்ணயித்த விலையில், மானியமாக பெறப்பட்டு வருகிறது.

### 4.4.14 சிறப்பு பொது விநியோகத் திட்டம்

அத்தியாவசியப் பொருட்களின் வெளிச் சந்தை விலையேற்றத்தினை கட்டுப்படுத்தும் பொருட்டு, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும்

பாமாயில் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் **13,461** மெ.டன் துவரம் பருப்பு, **7,000** மெ.டன் உளுத்தம் பருப்பு மற்றும் **15,000** கிலோ லிட்டர் பாமாயில் கொள்முதல் செய்யப்பட்டு மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மானிய விலையில் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:-

| பொருட்கள் | மாதாந்திர ஒதுக்கீடு (மெ.டன்) | வழங்கப்படும் அளவு (குடும்ப அட்டை ஒன்றுக்கு) | விற்பனை விலை (கிலோ ஒன்றுக்கு ரூ.) |
|---|---|---|---|
| துவரம் பருப்பு | 13461 | 1 கிலோ | 30 |
| உளுத்தம் பருப்பு | 7000 | 1 கிலோ | 30 |
| சமையல் எண்ணெய் | 1,50,00,000 (பாக்கெட்டுகள்) | 1 லிட்டர் (910 கிராம்) | 25 |

சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கான முழு மானியத்தையும் தமிழக அரசே ஏற்றுக்கொள்கிறது.

### 4.4.15 அம்மா சிமெண்ட் விநியோகத்திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அம்மா சிமெண்ட் விற்பனைத் திட்டம் **05.01.2015–ல்** துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தினர்

பயன்பெறும் வகையில் 50 கிலோ சிமெண்ட் மூட்டை ஒன்று விலை ரூபாய் 190/–க்கு (வரிகள் உட்பட) விற்பனை செய்யப்படுகிறது.

இந்த திட்டத்தின் வாயிலாக பயனாளிகள் தங்களது கட்டுமான மற்றும் பழுது பார்க்கும் பணிகளுக்கு கீழ்க்கண்ட அடிப்படையில் சிமெண்ட் மூட்டைகள் வாங்கிக் கொள்ள தகுதி பெறுகின்றனர்.

| | |
|---|---|
| ஆவண ஆதாரம் | அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடம் அல்லது கிராம நிர்வாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளர்/ ஒன்றிய மேற்பார்வையாளர்/ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சாலை ஆய்வாளர் வழங்கும் அங்கீகாரக் கடிதம் |
| கட்டடம் பழுது பார்க்க | குறைந்தபட்சம் 10 மூட்டைகள் அதிகபட்சம் 100 மூட்டைகள் |
| வீடு கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு–அதிகபட்சம் 1500 சதுர அடி, 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் | 500 சதுர அடிக்கு – 250 மூட்டைகள் |
| | 501-1000 சதுர அடிக்கு – 500 மூட்டைகள் |
| | 1001-1500 சதுர அடிக்கு – 750 மூட்டைகள் |

தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் சிமெண்ட், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

## 4.5 கண்காணிப்பு

பொது விநியோகத் திட்டத்தை திறம்பட கண்காணிப்பதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அ) கிடங்குப் பணிகள் அனைத்தையும் கணினி மயமாக்குதல்.

ஆ) கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், அத்தியாவசியப் பொருட்களின் நகர்வினை ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகன நகர்வு கண்காணிப்புத் திட்டம் மூலமாக கண்காணித்தல்.

இ) குறுஞ்செய்தி (SMS) மூலமாக நியாய விலைக் கடைகளில் உள்ள தினசரி இருப்பு விபரத்தை கண்காணித்தல்.

## 4.6 நிதி நிலை

இந்நிறுவனத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.100 கோடி மற்றும் ரூ.67.73 கோடியாக உள்ளது.

2015–2016 ஆம் ஆண்டுக்கான இக்கழகத்தின் விற்றுமுதல் ரூ.8,750 கோடியாக உள்ளது. 2016–2017ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூபாய் 5,500 கோடி உணவு மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இயல் – 5

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

### 5.1 முன்னுரை

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம் 1956–ன்படி தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் 02.05.1958 முதல் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு 7 மண்டலங்களில் முதுநிலை மண்டல மேலாளர்/ மண்டல மேலாளர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது.

### 5.2 செயல்பாடுகள்

இந்நிறுவனம் மாநிலம் முழுவதிலும் 55 கிடங்குகளைக் கொண்டுள்ளது. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விளைபொருட்களின் சேமிப்பு இழப்பினைத் தடுப்பதே இந்நிறுவனத்தின் முக்கியச் செயல்பாடாகும். இந்நிறுவனம், ஆய்வினை மேற்கொண்ட பின், வாய்ப்புள்ள இடங்களில், நிலம்

கையகப்படுத்தி விஞ்ஞான ரீதியிலான சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி வருகிறது. இந்நிறுவனம், விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் வசதியைப் பெற ஏதுவாக மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipts) வழங்குகிறது. இந்நிறுவனம் அதன் சேமிப்புக் கிடங்குகளிலும் அதேபோன்று வணிகம் சார் பணியாக பல்வேறு அரசு மற்றும் தனியார் கட்டிடங்களிலும் பூச்சித் தாக்குதல் தடுப்புப் பணிகள் மற்றும் பூச்சிக்கொல்லி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 5.3 நிறுவனத்தின் அமைப்பு

இந்நிறுவனத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகள், தலைவர் உள்ளடங்கிய 11 இயக்குநர்களைக் கொண்ட குழுமத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு சார்பாக 5 இயக்குநர்களும் மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பாக 5 இயக்குநர்களும் நியமிக்கப்படுகின்றனர். குழுமத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் மாநில அரசால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

அரசால் அவ்வப்போது எடுக்கப்படும் கொள்கை முடிவுகள் மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின்

வழிகாட்டுதலின்படி, இக்குழுமம், பொதுமக்களின் நலனுக்காக வலுவான வியாபாரக் கோட்பாடுகளின்படி செயல்படுகிறது.

## 5.4 சேமிப்புக் கொள்ளளவு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்த கொள்ளளவான **6.74** இலட்சம் மெட்ரிக் டன்னில் நிறுவனத்திற்கு **6.52** இலட்சம் மெட்ரிக் டன் சொந்த சேமிப்புக் கிடங்குகளிலும், **0.22** இலட்சம் மெட்ரிக் டன் வாடகை வளாகங்களிலும் உள்ளன.

### 5.4.1 பயன்பாடு

இந்நிறுவனத்தின் சேமிப்பு கிடங்குகள், முக்கியமாக இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஆவின், தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், சர்க்கரை ஆலைகள், உர உற்பத்தி நிறுவனங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய புகையிலை நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 90 சதவீதத்திற்கும் மேலாக பயனீட்டு அளவினை ஜூன் 2015 முதல் நிலையாக பராமரித்து வருகிறது.

**5.5. சேமிப்புக் கிடங்கினைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் இருப்பு வைப்புக் கட்டணத்தில் தள்ளுபடி விபரம்**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் அரசு/ பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு இருப்பு வைப்புக் கட்டணத்தில் கீழ்க்கண்டவாறு தள்ளுபடி அளித்து வருகிறது.

| வ. எண். | சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர் | பொருள் | தள்ளுபடி (விழுக்காட்டில்) |
|---|---|---|---|
| 1 | விவசாயிகள் | உணவுத் தானியங்கள் | 30 |
| 2 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | உணவுத் தானியங்கள் | 30 |
| 3 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் | 25 |
| 4 | வருவாய்த் துறை | மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் | 20 |
| 5 | கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் | சர்க்கரை | 20 |
| 6 | ஆவின் | பால் பொருட்கள் | 20 |
| 7 | MFL, IFFCO, FACT மற்றும் KRIBHCO போன்ற பொதுத் துறை உர உற்பத்தி நிறுவனங்கள் | உரம் | 10 |
| 8 | கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் /தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், முதலியன | வேட்டிகள், சேலைகள், விவசாயப் பொருட்களான கொப்பரை, சோளம் முதலியன | 10 |

| | | | |
|---|---|---|---|
| 9 | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | இந்தியத் தயாரிப்பு வெளிநாட்டு மதுபானம் | 10 |
| 10 | தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் | காகித தயாரிப்புகள் | 20 |
| 11 | இந்திய புகையிலை நிறுவனம் (ITC) | புகையிலை | 20 |
| 12 | இந்திய உணவுக் கழகம் | மத்திய அரசு நிர்ணயிக்கும் சேமிப்புக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. | |

**5.6 சேமிப்புக் கொள்ளளவை மேம்படுத்தவும், எடை மேடை நிறுவவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.**

இந்நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் சேமிப்பு கிடங்கு கொள்ளளவினை கணிசமான அளவு உயர்த்தியுள்ளது. சட்டமன்றத்தில் 23.04.2012ஆம் தேதியன்று அறிவித்தபடி ஒரு கிடங்கு, ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் (நாகப்பட்டினம் மாவட்டம்) 3,400 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.05.2013ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் அறிவித்தபடி, இக்கழகம் 65,400 மெ.டன் கொள்ளளவில் 8 புதிய கிடங்குகள் மற்றும் 7 கூடுதல் கிடங்குகளை ரூ.67.72 கோடி மதிப்பீட்டில் கட்டவுள்ளது.

இந்நிறுவனம் 2015ஆம் ஆண்டில் ரூ.107.73 இலட்சம் மதிப்பீட்டில் 60 மெ.டன் கொள்திறன் கொண்ட, குழி உடைய

7 மின்னணு லாரி எடை மேடைகளை (Pit Type Electronic Lorry Weighbridge) மதுராந்தகம், காரைக்குடி, அருப்புக்கோட்டை, கோவில்பட்டி, திருமங்கலம், வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய சேமிப்புக் கிடங்குகளில் நிறுவியுள்ளது. **2015–16** ஆம் ஆண்டில் ரூ.**1.31** கோடி மதிப்பீட்டில், **60** மெ.டன் கொள்திறன் கொண்ட **8** குழி இல்லாத மின்னணு லாரி எடை மேடைகளை (Pit less Type Electronic Lorry Weighbridge) முத்தூர், பட்டிணம்காத்தான், கடலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, முசிறி, புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கியில் நிறுவி வருகிறது. ரூ.**16.37** இலட்சம் மதிப்பீட்டில் **60** மெ.டன் கொள்திறன் கொண்ட, ஒரு குழி இல்லாத மின்னணு லாரி எடை மேடையினை (Pit less Type Electronic Lorry Weighbridge) புதுக்கோட்டை சேமிப்புக் கிடங்கிலும் நிறுவியுள்ளது.

### 5.7 புற ஊதா ஒளிப் பொறிகள் வாங்குதல்

சட்டமன்றத்தில் **03.09.2015** அன்று அறிவித்தவாறு ரூ.**9.31** இலட்சம் மதிப்பீட்டில் **162** புற ஊதா ஒளிப்பொறிகள் (Ultra Violet Light Traps-Pest Control Machine) வாங்கப்பட்டு, இந்திய உணவுக் கழகத்தின் உணவுத் தானியங்களை சேமிக்கும் **22** சேமிப்புக் கிடங்குகளுக்கு, உணவுத் தானியங்களை, பூச்சித் தாக்குதலின்றி பாதுகாத்து வருவதற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 5.8 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்

இந்நிறுவனம் அரசுத் துறைகள், அரசு பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு பூச்சித் தடுப்பு நடவடிக்கைகளை செய்து வருகிறது. இந்நடவடிக்கைகள் மூலம் **2015–2016–**ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ.**52.36** இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

## 5.9 பயிற்சி

இந்நிறுவனம், "**உணவுத் தானியங்களை விஞ்ஞான முறையில் சேமித்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு**" ஏற்படுத்தும் வகையில் ரூ.**35.20** இலட்சம் செலவில், **1,570** விவசாயிகள் மற்றும் கிடங்கு பணியாளர்களுக்கு 7 மண்டல தலைமையிடங்களில் பிப்ரவரி **2016**ல் விழிப்புணர்வு பயிற்சி அளித்துள்ளது. இம்முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரூ.**1,650/–** மதிப்பிலான ஒரு கைத்தெளிப்பான் மற்றும் **500** மி.லி. வேதியியல் பொருட்களான மாலத்தியான் (Malathion), டி.டி.வி.பி. (D.D.V.P) வழங்கப்பட்டது.

## 5.10 நிதிச் செயலாக்கம்

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் கடந்த **4** ஆண்டுகளுக்கான நிதிச் செயலாக்க விவரங்கள் பின்வருமாறு:–

(ரூபாய் கோடியில்)

| விபரம் | 2012–2013 | 2013–2014 | 2014–2015 | 2015–2016 (உத்தேசமாக) |
|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தலா 50%) | 7.61 | 7.61 | 7.61 | 7.61 |
| மொத்த வருமானம் | 40.50 | 49.35 | 57.71 | 60.65 |
| செலவு | 31.42 | 26.13 | 30.69 | 33.06 |
| **வரி செலுத்தும் முன் லாபம்** | **9.06** | **23.22** | **27.22** | **28.00** |

## 5.11 ஆதாயப் பங்கு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது, 2014–2015ஆம் ஆண்டிற்கு பங்கு முதலீட்டாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 30% ஆதாயப் பங்காக ரூ.2.28 கோடி அளித்துள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.17.67 கோடி ஆகும்.

## 5.12 சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு

இந்நிறுவனம் 2015–2016–ஆம் ஆண்டில் மின்கலத் திறனில் இயங்கும் 2 வாகனங்கள் மற்றும் 2 ஓட்டுநர்களுக்கு 12 மாதத்திற்கான மதிப்பூதியத் தொகையான மொத்தம் ரூ.11.83 இலட்சத்தினை சென்னை, மாற்றுத் திறனாளிகள் நல மாநில ஆணையர் அவர்களுக்கு வழங்கியுள்ளது.

**5.13 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளின் மீது கடன் வசதிகள்**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் **36** சேமிப்புக் கிடங்குகள் சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், **2007–**ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் (WDRA), இந்நிறுவனத்தின் கிடங்கு வசதியைப் பயன்படுத்தும் விவசாயிகள் மற்றும் தனியார் சரக்கு வைப்பாளர்கள், வங்கிகள் மூலம் கடன் பெற ஏதுவாக, மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipts) வழங்குகின்றது. விவசாயிகள்/ சரக்கு வைப்பவர்கள், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை அடமானம் வைப்பதன் மூலம் தங்களது சரக்கின் மீது, விவசாய விளைபொருட்கள் மதிப்பில் **60**% முதல் **80**% வரை கடன் பெற்று வருகின்றனர். **2015–2016**ஆம் ஆண்டில், **2,597** மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் வழங்கப்பட்டு, ரூ.**186.10** கோடி கடன் உதவி பெறப்பட்டுள்ளது.

# இயல்–6

## அமலாக்கம்

### 6.1 முன்னுரை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி விலையின்றியும், இதர பொருட்கள் மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. வெளிச்சந்தையில் விற்கப்படும் பொருட்களின் விலைக்கும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களுக்கும் உள்ள அதிகப்படியான விலை வித்தியாசத்தினை பயன்படுத்தி சமூக விரோதிகள் இந்த அத்தியாவசியப் பொருட்களைக் கடத்தி கள்ளச் சந்தையில் விற்க முயல்கின்றனர். இச்சமூக விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

### 6.2 செயலாக்கம்

பொது விநியோகத் திட்டச் செயலாக்கப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்த காவல் துறை இயக்குநர் தலைமையில், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப் பிரிவு செயல்பட்டு வருகிறது. **33** குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலகுகள், அத்தியாவசியப் பண்டங்கள்

சட்டம், **1955**–னை மாநிலம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்துவதை உறுதி செய்கின்றன. இதைத்தவிர, **5** எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படைகளும் இதனைக் கண்காணித்து வருகின்றன. அவ்வப்பொழுது ஆய்வுகள் மற்றும் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு கடத்தல் தடுக்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களைக் கடத்துபவர்கள் மற்றும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. **01.04.2015** முதல் **31.03.2016** ஆம் ஆண்டு வரை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையால், **6,380** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, **6,330** நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். **1,583** வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, தோராயமாக, **1,457.7** மெட்ரிக் டன் பொது விநியோகத் திட்ட அரிசி கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளது. **01.04.2015** முதல் **31.03.2016** ஆம் ஆண்டு வரை, கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், **1980**–ன்கீழ், **193** முக்கிய குற்றவாளிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகக் கிடங்குகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் போதும் மற்றும் அங்கிருந்து நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்லும் போதும் வழியில் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் விழிப்புப் பணிக்குழு அலுவலர் தலைமையில் ஒரு குழு செயல்படுகிறது.

## 6.3 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையரகத்தின் அமலாக்கச் செயல்பாடுகள்

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களின் விநியோகத்தை முறையாகக் கண்காணித்து மேம்படுத்த மாவட்டம் மற்றும் வருவாய் கோட்ட அளவில் பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் பறக்கும்படைகள் மேலும் சிறப்பாகப் பணிபுரிய அவர்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கும் பொருட்கள் கடத்தப்படுவது குறித்த புலனாய்வு விவரங்களைச் சேகரித்து

திடீர் சோதனை மேற்கொள்ள ஏதுவாக, ரூ.800/- வரை ஏற்பளிக்கப்பட்ட கட்டணம் கொண்ட அலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை நகரத்தைப் பொறுத்தவரை துணை ஆணையாளர் வடக்கு / தெற்கு ஆகியோர் பொது விநியோகத் திட்ட செயலாக்கப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுகின்றனர்.

**6.4 கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள்**

- பதுக்கல் மற்றும் கடத்தலில் ஈடுபடுபவர்களைப்பற்றி தகவல் தரும் நபருக்கு ரூ.1,000/– வெகுமதி அளிக்கப்படுகிறது.
- பொது விநியோகத் திட்ட பொருட்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் உரிமங்கள் மற்றும் ஓட்டுநர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படுகின்றன.
- மானியத்துடன் கூடிய வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு உருளைகளை கள்ளச் சந்தையில் புழக்கத்தில் விடுவதைத் தடுக்கும் வண்ணம் சிறப்புச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- முறைகேடாகப் பொது விநியோகத் திட்ட அரிசியை மறு சுழற்சி செய்யும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் அரவை முகவர்களின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகின்றன.

## 6.5 செயலாக்கம்

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையால் **16.05.2011** முதல் **30.06.2016** வரை மேற்கொள்ளப்பட்ட கைப்பற்றுகை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விபரம் | 2011 முதல் 2016 வரை (16.05.2011 முதல் 30.06.2016 வரை) | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மொத்த வழக்குகள் | 41,905 | | | |
| 2. | கைப்பற்றுகை | வழக்கு களின் எண்ணிக்கை | அளவு குவிண்டால்/ லிட்டர்/எண். | | மதிப்பு (ரூபாய்) |
| | அ) பொது விநியோகத் திட்ட அரிசி | 24,542 | 93,970.21 | | 5,30,93,169 |
| | ஆ) பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் | 4,959 | 2,94,618 | | 44,19,270 |
| | இ) சிலிண்டர் (எண்ணிக்கையில்) | 11,492 | 16,645 | | 1,49,80,500 |
| | ஈ) மற்றவை (மதிப்பில் – ரூ) | 912 | | | 5,65,78,367 |
| 3. | **மொத்த மதிப்பு (ரூ)** | | | | **12,90,71,306** |
| 4. | கைது எண்ணிக்கை | **30,340** | | | |
| 5. | கைப்பற்றிய மொத்த வாகனங்கள் | **2 சக்கரம்** | **3 சக்கரம்** | **4 சக்கரம்** | **மொத்தம்** |
| | | 4,602 | 411 | 1,770 | **6,783** |
| 6. | தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | பொது விநியோகத் திட்ட அரிசி – 846<br>பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் – 30<br>சிலிண்டர் – 1<br>கலப்பட ஆயில் – 2<br>முறைகேடு வழக்குகள் – 1<br>பொது விநியோகத் திட்ட பருப்பு – 1<br>**மொத்தம் – 881** | | | |

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் செம்மையான பணியை 04.07.2014 அன்று, தலைநகர் டில்லியில் நடைபெற்ற அனைத்து மாநில உணவு அமைச்சர்களின் மாநாட்டில் பாராட்டப்பட்டது. 07.05.2015 நாளிட்ட மத்திய நுகர்வோர் விவகாரம் உணவு மற்றும் பொது விநியோகத்திட்ட அமைச்சகத்தின் கடித எண் S8/2/2015-ECR&E-யில் அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும், காவல்துறை இயக்குநர்களுக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி, அதில் தமிழகக் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்பான செயல்பாட்டை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளது.

“தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலைத் தடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அத்தியாவசியப் பொருட்கள் கடத்துதல், பதுக்குதல் மற்றும் அதனால் லாபமடைதல் போன்ற எந்த செயலையும் சிறிதளவும் பொறுத்துக்கொள்ளாமல், கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளைச் சிறப்பாக செயல்படுத்திவரும் தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறையை முன்மாதிரியாகக்

கொண்டு, அதுபோலவே தனிக்காவல் அமைப்பை ஏற்படுத்த மற்ற மாநிலங்களும் முன்வரவேண்டும்"

மேற்கண்ட சுற்றறிக்கையைத் தொடர்ந்து **24.06.2015** நாளிட்ட கடித எண் S-13/38/2015-ECR&E-யில் மத்திய நுகர்வோர் விவகாரம் உணவுப் பொது விநியோக அரசு செயலாளர், தமிழக உள்துறை செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விவரித்திருந்தார்.

"தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் **1955** (EC.Act 1955) மற்றும் கள்ளச்சந்தைத் தடுப்புக் காவல் சட்டம் **1980** (PBMMSEC Act) ஆகிய சட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையைப் போலவே மற்ற மாநிலங்களிலும் ஒரு அமைப்பை ஏற்படுத்த இந்தத் துறை ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்".

## முடிவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் நுகர்வோர் நலனைப் பாதுகாக்கவும், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பெருமுயற்சி மேற்கொண்டுள்ளது. இத்துறையானது இதனை உறுதி செய்யவும் பொதுவிநியோகத் திட்டத்தினைப் பலப்படுத்தவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன், அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்து, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்து, ஏழை எளிய மக்களின் நலன் காக்க, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**இரா. காமராஜ்**
உணவு மற்றும் நுகர்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்